அடையாள இலக்கம்:

B ☐☐☐☐☐☐

அகில அவுஸ்திரேலியா, நியூசிலாந்து
தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் - 2016

அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்
Tamil Competition – Australian Society of Graduate Tamils

# எழுத்தறிவுப் போட்டி

## மத்திய பிரிவு

(8 – 9 வயதுப் பிரிவு)

நேரம்: 1 மணித்தியாலம் 30 நிமிடங்கள்

பரீட்சைத் தாளை வாசிக்க மேலதிகமாகப் 10 நிமிடங்கள் வழங்கப்படும்.

| மொத்தப் புள்ளிகள் | |
|---|---|

(அ) கோடிட்ட இடங்களைப் பொருத்தமான ஒரு எழுத்தைக் கொண்டு நிரப்புக.
(10 புள்ளிகள்)

1. நீ ______ நிறம்
2. தீ ______ வளி
3. வெள் ______ க்கிழமை
4. ஒட்டகச் ______ விங்கி
5. நெ ______ றி
6. ஐம் ______ தம்
7. கம்ப ______ மாயணம்
8. ______ காசிமாதம்
9. மா ______ ளம்பழம்
10. இசைக் ______ ருவிகள்

(ஆ) கீழே தரப்பட்ட சொற்களுக்குப் பன்மைச் சொற்களை எழுதுக.

(10 புள்ளிகள்)

1. பழம் - ____________________
2. நீ - ____________________
3. அது - ____________________
4. சிறுவன் - ____________________
5. அவன் - ____________________

**(இ) கீழே தரப்பட்ட சொற்களிலிருந்து பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து வசனத்தைப் பூர்த்தி செய்க.** (10 புள்ளிகள்)

1. மீனா ______________________ பள்ளிக்குச் சென்றாள்.

அ) அம்மாவுடன் ஆ) அம்மாவுக்கு

இ) அம்மாவை ஈ) அம்மாவிடமிருந்து

2. என் ______________________ மாம்பழம் என்றால் மிகவும் விருப்பம்.

அ) நண்பனை ஆ) நண்பனுக்கு

இ) நண்பனிடம் ஈ) நண்பனைப்போல்

3. குரங்கு ______________________ இறங்கி வருகிறது.

அ) மரம் ஆ) மரத்துக்கு

இ) மரத்திலிருந்து ஈ) மரத்தினுடைய

4. என் நண்பன் இந்தக் ______________________ எழுதினான்.

அ) கட்டுரையை ஆ) கட்டுரைக்கு

இ) கட்டுரையால் ஈ) கட்டுரையுடன்

5. என் அம்மா, என்னிடம் மிகுந்த ______________________ உள்ளவர்.

அ) அன்பால் ஆ) அன்பு

இ) அன்பினால் ஈ) அன்புக்கு

**(ஈ) வாக்கியத்திலே கோடிட்ட சொல்லுக்கு ஒத்த கருத்துள்ள சொல்லைத் தெரிந்து அதன்கீழே கோடிடுக.** (10 புள்ளிகள்)

1. நான் **தினமும்** மாலையில் விளையாடுவேன்.

   அ) நாள்தோறும் ஆ) இரவில்

   இ) மத்தியானத்தில் ஈ) வைகறையில்

2. மனிதர்கள் மன **மகிழ்ச்சியுடன்** இருக்க வேண்டும்.

   அ) வருத்தத்துடன் ஆ) துன்பத்துடன்

   இ) சந்தோசத்துடன் ஈ) வெறுமையுடன்

3. மக்கள் பூக்களின் **மணத்தை** விரும்புகின்றனர்.

   அ) வாசனையை ஆ) கரிசனையை

   இ) நிறத்தை ஈ) வண்ணத்தை

4. மாணவர்கள் பள்ளி மண்டபத்துக்கு **வரிசையாகச்** சென்றார்கள்.

   அ) கூட்டமாகச் ஆ) நிரையாகச்

   இ) சேர்ந்து ஈ) பிரிந்து

5. தமிழ்ப் **புத்தகங்கள்** படிப்பதால் தமிழ் அறிவு வளரும்.

   அ) நூல்கள் ஆ) கதைகள்

   இ) சஞ்சிகைகள் ஈ) கட்டுரைகள்

**(உ) கீழேயுள்ள முதல் வாக்கியங்களிற் கோடிடப்பட்ட வினைச்சொல் ஒவ்வொன்றின் காலத்தை அதன் கீழுள்ள வாக்கியத்திற்கு ஏற்றபடி மாற்றித் தரப்பட்ட இடைவெளிகளை நிரப்புக.** (20 புள்ளிகள்)

1. நான் நேற்றுக் கடலில் **நீந்தினேன்.**

   நான் நாளைக்கும் கடலில் ______________________.

2. அம்மா பூக்களை மாலையாகத் **தொடுக்கிறார்.**

   நானும் நாளைக்கு பூக்களை மாலையாகத் ______________________.

3. நேற்று மழை **பெய்தது**.

   இப்பொழுதும் மழை விடாமல் ______________________.

4. சென்ற வருடம் நான் பேச்சுப் போட்டியில் **பங்குபற்றினேன்**.

   அடுத்த வருடமும் நான் பேச்சுப் போட்டியில் ______________________.

5. சிறுவர்கள் தற்போது திடலில் **விளையாடுகிறார்கள்**.

   சிறுமிகள் முன்பு திடலில் ______________________.

**(ஊ) கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்களிலிருந்து பொருத்தமானவற்றைத் தேர்ந்தெடுத்துத் தரப்பட்ட சிறுகதையிற் காணப்படும் கோடிட்ட இடங்களை நிரப்புக.** (20 புள்ளிகள்)

| | | | |
|---|---|---|---|
| **ஒவ்வொன்றாக** | **தாமதமாகவே** | **உணவாகக்** | **ஆத்திரம்** |
| **இறந்தது** | **கட்டளை** | **சிங்கம்** | |
| **சிங்கத்திற்கு** | **தவணை** | **கர்ச்சித்தது** | |

வேட்டையாடச் சென்ற ______________ சில நாள்களாக மிருகங்கள் ஒன்றும் ______________ கிடைக்கவில்லை. காட்டுராசா தான்தானே என்று கர்வம் கொண்ட சிங்கம் எல்லா மிருகங்களையும் அழைத்து, “இன்று முதல் உங்களில் ஒரு மிருகம் தினமும் எனக்கு உணவாக வரவேண்டும். தவறினால் உங்கள் இனத்தையே அழித்து விடுவேன்” எனக் ______________ இட்டது. அன்று முதல் பயங்கொண்ட மிருகங்கள் ______________ ஒவ்வொரு நாளும் சிங்கத்திற்கு உணவாகி இறந்தன. வேட்டையாடாமல் விருந்து கிடைப்பதை எண்ணிச் சிங்கம் மகிழ்ச்சியுடன் நாள்களைக் கழித்தது.

முயலின் ______________ வந்ததும், அது சிங்கத்தை எப்படியும் தந்திரத்தால் வென்றுவிட ஒரு திட்டம் போட்டது. அன்று ______________ சிங்கத்திடம் சென்றது. கோபம்கொண்ட சிங்கம் “ஏன் இவ்வளவு தாமதம?” எனக் ______________. இதற்கு முயல் “நான் வரும் வழியிலே இன்னுமொரு சிங்கம் என்னைக் கொன்றுவிடத் துரத்தியது. அதனிடமிருந்து தப்பி வரத் தாமதமாகிவிட்டது” எனச் சொன்னது. இதனால் ______________ அடைந்த சிங்கம் புதிய சிங்கத்தைக் காட்டும்படி கேட்டது. முயல், இராசாச் சிங்கத்தை அழைத்துச் சென்று ஒரு பாழடைந்த கிணற்றைக் காட்டியது. அதனுள் எட்டிப் பார்த்த ______________ தனது பிம்பம் தண்ணீருக்குள்ளே தெரிகின்றது என்ற அறிவு கூட இல்லாது அதனைக் கொல்ல எண்ணிக் கிணற்றிற்குள்ளே பாய்ந்து ______________. அன்றிலிருந்து எல்லா மிருகங்களும் மகிழ்ச்சியாக வாழ்ந்தன. “மதியால் விதியையும் வெல்லலாம்”, “அறிவு ஆற்றலை வெல்லும்” என்பவை இந்தக் கதையின் உட்கருத்துகள் ஆகும்.

**(எ) கீழேயுள்ள படத்தைக் கவனமாகப் பார்க்கவும். அதன் கீழே தரப்பட்ட ஐந்து (5) சொற்களைப் பாவித்துப் படத்துக்குப் பொருத்தமான வசனங்களை எழுதுக.** (20 புள்ளிகள்)




1. மிருகக் காட்சி சாலை: ______________________________

______________________________

______________________________

2. வேலி: ______________________________

______________________________

______________________________

3. குதிரைச் சவாரி: ____________________

____________________

____________________

4. குரங்குகள்: ____________________

____________________

____________________

5. மிருகங்களுக்கு உணவளிக்கக்கூடாது: ____________________

____________________

____________________

____________________